கட்டப்பட்டிருந்தன. புரட்சித் தலைவி அம்மாவினுடைய 2001–2006 ஆட்சியில் 761 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய விடுதிகள் கட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் ஆணை பிறப்பிக்கப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் 68 சதவீதத்தினராக இருக்கக்கூடிய, நிலையில் அடித்தளத்தில் இருக்கின்ற அத்தகைய பள்ளி மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவ, மாணவிகளுடைய உணர்வை மதித்து, இன்று மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, மனித நேயமிக்க முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில், எல்லா விடுதிகளும் அரசு விடுதிகளாக, அத்தனை வசதிகளும் கொண்டதாக இருக்கின்றன என்ற நல்ல செய்தியை அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே . .

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன், அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) பேரவை விதி 110–ன்கீழ் . . . (குறுக்கீடு) துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். மறுபடியும் கூப்பிடுகிறேன்.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்க்கு விடுதிகள் கட்டுதல் மற்றும் அவர்களுக்கு இலவச அகராதியும் Atlas-ம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்விக்கு எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து பள்ளி மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக, அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளாக தொடக்கப் பள்ளி; 3 கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளாக நடுநிலைப் பள்ளி; 1 முதல் 12 ஆம் வகுப்புவரை இலவசப் பாடப் புத்தகங்கள்; +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவச சைக்கிள்கள்; கல்வி உதவித் தொகை; இலவசச் சீருடை; சத்துணவு என சிறப்புடன் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைளின் பயனாக தமிழகம் இன்றைக்குப் பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொருளாதாரத்தில் கீழ்த்தட்டில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு, அரசு, மாணவ, மாணவியர் விடுதிகள் மிகப் பெரும் உதவியாக இருக்கின்ற காரணத்தால், 2001 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கிப் பயிலுகின்ற அனைத்து விடுதிகளுக்கும் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்திட ஆணையிட்டேன். மேலும், விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்குத் தரமான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பள்ளி விடுதிகளுக்கான உணவுக் கட்டணத்தை 1–10–2001 முதல் 225 ரூபாயில் இருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 25

*முற்பகல் 11–05*

*2001 ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், மொத்தம் உள்ள 1,102 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்களில், 493 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. அதேபோல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கிப் பயின்று வந்த 972 விடுதிகளில், 760 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. இவ்வாறு, தேவையான அடிப்படை வசதிகளும், போதிய இட வசதியும் அற்ற, இத்தகைய தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர், முழு ஊக்கத்துடன் தங்களது கல்வியைக் கற்க இயலாது என்பதால், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த மாணவ, மாணவியருக்கான அனைத்து விடுதிகளுக்கும், போதிய இடவசதி, காற்றோட்ட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன கழிப்பிட வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடன், சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் ஆணையிட்டேன்.*

*இதன்படி, தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த 493 ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள், 155 கோடி ரூபாய் செலவில் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டு, அவற்றில் 360 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 133 விடுதிகள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.*

*பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர் விடுதிகளைப் பொறுத்தமட்டில், 2005–2006 ஆம் ஆண்டில் கமுதியில் தொடங்கப்பட்ட ஒரு சீர்மரபினர் கல்லூரி விடுதியையும் சேர்த்து, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 761 விடுதிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இதில் 294 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டுவிட்டன. மேலும், 304 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இதுவன்றி, மீதம் இருக்கும் ஏனைய விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் அமைத்திட, பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*தமிழகத்தின் உட்கோடி கிராமங்களில் வசித்து வருகின்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளிய மாணவ, மாணவியர் பள்ளிக் கல்வி, குறிப்பாக நடுநிலைக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை*

பயிலவும் மற்றும் உயர்கல்வி பயிலவும் ஊக்கம் அளிக்கும் ஒரு வரப்பிரசாதமாக இந்த மாணவ, மாணவியர் விடுதிகள் அமைந்துள்ளன.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கு விடுதிகளில் போதிய இடம் கிடைக்கவில்லை என்ற முறையீட்டின் அடிப்படையில், 2005–2006 ஆம் ஆண்டு முதல், 3,275 கூடுதல் இடங்களுக்கு எனது அரசு ஒப்பளிப்பு வழங்கி மாணவ, மாணவியரின் தேவையை நிறைவு செய்தது.

கிராமப்புறங்களிலும், பிற பகுதிகளிலும், கல்வி நிலையங்கள் அதிக அளவில் திறக்கப்படுவதுடன், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுவதாலும், இப்பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியர் இடை நிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஆர்வம் கொண்டிருப்பதாலும், புதிய விடுதிகள் திறக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டே, 4 கோடி ரூபாய் செலவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்காக மேலும் 108 மாணவ, மாணவியர் விடுதிகளை எனது அரசு தொடங்கும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் 13–01–2006 அன்று நிகழ்த்திய தனது உரையில் தெரிவித்தார்.

இதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த ஏழை எளிய மாணவ, மாணவியரின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, 108 புதிய விடுதிகள் தொடங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 4.76 கோடி ரூபாய் செலவில் 20 கல்லூரி விடுதிகளும், 88 பள்ளி விடுதிகளும், ஆக மொத்தம் 108 விடுதிகள் தொடங்கப்படும். ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கென தொடங்க ஆணையிடப்பட்டுள்ள இந்த 216 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரிந்து பரந்த உலக வாய்ப்புகளை, எளிதில் நமது கைகளுக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற கருவிகளில் ஒன்றாக ஆங்கில மொழி அறிவு திகழ்கிறது. மாணவ, மாணவியர் தங்களது பாடங்களில் உள்ள

ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான பொருளைப் புரிந்துகொண்டு, அப்பாடங்களை நல்லமுறையில் கற்றுத் தேறவும், தமது ஆங்கில மொழி அறிவுக்கு நல்ல அடித்தளம் அமைத்துக்கொள்ளவும் ஏதுவாக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும், ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றை இலவசமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–10*

மேலும், உலக நாடுகள் பற்றிய தங்களது பூகோள அறிவை விரிவுபடுத்திக்கொள்ளும்வகையில், இந்த மாணவ, மாணவியர் அனைவருக்கும் உலக நாடுகளின் பூகோள வரைபடத் தொகுப்பான Atlas ஒன்றையும் இலவசமாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு அகராதி ஒன்றும், Atlas ஒன்றும் இலவசமாக வழங்கப்படுவதன்மூலம் அரசுக்கு 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இதனால் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

கல்வித் துறையில் முதன்மை இடத்தில் இருக்கும் தமிழகம், தொடர்ந்து மேம்பாடு காண, இன்று நான் அறிவித்துள்ள அறிவிப்புகள் உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதே ஆரம்பித்துவிட்டீர்களா? பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஏற்கெனவே இந்த அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது, முதலமைச்சர் அவர்களும் பதில்

சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வந்திருக்கிற செய்திகள், பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்து, மேலும் பயங்கரமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. திட்டம் தயார், பணம் தயார், ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நிறைவேறும் என்று சொன்னால், அதனால் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்படும். விவசாயிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். ஏற்கெனவே இதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். *(குறுக்கீடு)* பிரச்சினை என்ன என்பதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு அதை நான் சொல்கிறேன் என்றால்.. *(குறுக்கீடுகள்)* அதற்காகத்தான் அவை இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* அதைச் சொல்லவேண்டிய முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள், இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள்!

**திரு. துரைமுருகன்:** என்ன செய்ய இருக்கிறீர்கள்? முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள். சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல்லே நாட்டப் போகிறார்கள். *15–2–2006 . . .*

**திரு. துரைமுருகன்:** அதைத்தான், அதைத்தான் சொல்கிறேன். ஆகையினாலே, இதுகுறித்து அரசு என்ன நிலைப்பாடு எடுத்திருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* ஒரே நிமிடம். *15–2–2006 . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைத்தான் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடு)* அவர் இன்றைக்குப் பேச இருக்கிறார். விரிவாகப் பேசுவார். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின்

*அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு ஓர் அணையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது என்பதைப்பற்றி இந்த அவையில் பல முறை இந்தக் கூட்டத் தொடரில் பேசிவிட்டோம். இன்று காலையில்கூட இதுசம்பந்தமாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் ஆய்வு நடத்திவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் இப்போது வந்திருக்கிறேன். பாலாற்றின் குறுக்கே, ஆந்திர மாநில அரசு அணை கட்டுவதைத் தடுப்பதற்காக உடனடியாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வணங்கி, *2003–2006* ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் சமூக நலம் குறித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையினையும், வனம் குறித்த முப்பத்து நான்காவது அறிக்கையினையும், எரிசக்தித் துறை குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், முப்பத்து மூன்று முதல் முப்பத்து ஐந்து வரையிலான அறிக்கைகளை அச்சடித்து, பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.